2002 அக்டோபர் 30] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிமுகம் செய்த பிறகு கொடுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிமுகம் செய்துவிடுகிறேன். உங்களுடைய கருத்துகளைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அந்த Bill-க்கா; இதற்கா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நபர் ஒருவரைப் புதைக்கிற சட்டம். (குறுக்கீடுகள்). அது முடிந்துவிட்டது. ஆய்வுக்கு வரும்போது பேசுங்கள். அது முடிந்துவிட்டது. வாக்கெடுப்புக்கு விட்டு அது நிறைவேறிவிட்டது. ஆய்வுக்கு வரும்போது பேசுங்கள். இப்போது நீங்கள் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக்கோருகிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இது நிராகரிப்புத் தீர்மானம் இல்லை. எதிர்க்கிறேன் என்று மட்டும்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. பேசக்கூடாது.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *அறிவிப்புக் கொடுத்து விட்டுச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை, நிராகரிப்புத் தீர்மானம் இல்லை. (குறுக்கீடுகள்)*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *அந்த அவசரச் சட்டத்தையும் எதிர்க்கிறேன். அறிமுக நிலையிலேயும் எதிர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அவ்வளவுதான்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களாலே அறிமுகம் செய்யப்பட்ட கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் தேவையில்லாதது என்பதைக் கருதி, அறிமுக நிலையிலேயே பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே கடுமையாக எதிர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பரிதியா? திரு. புகழேந்தியா, இல்லை இரண்டு பேரும் நிற்கிறீர்கள். என்னது, உங்களுக்குள்ளே கட்டப் பஞ்சாயத்து பண்ணுவதுபோல் கொண்டு வந்து விட்டுவிட்டீர்கள்.*

திரு. பரிதி இளம்வழுதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் தேவையில்லை என்கின்ற காரணத்தால் இதை அறிமுக நிலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்குத்தான் கண்ணியமாகப் பேசியிருக்கிறீர்கள். (சிரிப்பு)*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தச் சட்டத்தை* disapproval *பண்ணக்கூடிய முறையிலே ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிராகரிப்புத் தீர்மானம் என்பது இப்போது கிடையாது. ஆய்வுக்கு வரும்போதுதான் எடுத்துக் கொள்ளப்படும்.*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *இப்போது நீதிமன்றத்தில் இருக்கிறது.*

2002 அக்டோபர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கிறீர்களா; இல்லையா என்பதை மட்டும் இப்போது சொல்லுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: நாங்கள் இதை எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான், உட்காருங்கள். திரு. பழனிச்சாமி, திரு. ஹேமச்சந்திரன் உட்காருங்கள். உட்காருங்கள். அதற்கு அரசு விளக்கம் சொல்லும்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுக நிலையிலே நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. எச். ராஜா.

பிற்பகல் 12-10

திரு. எச். ராஜா:**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதரவு என்பது கூடாது. (குறுக்கீடுகள்) ஆதரவு என்பது அறிமுக நிலையிலே தேவையில்லை. ஆகவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.